..ed as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/3007 of 1953.

விரோதிஞு (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது.

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

..ந்-எடு] யாழ்ப்பாணம்:- சுபகிருதுஞு பங்குனிமீ உநஉ வெள்ளிக்கிழமை (5 April. 1963) [இல-க]

## ..மாயாவாத தும்சகோளரி நா. கதிரைவேற்பிள்ளை

II.

## ..-4-63 ஞாபக தினம்

[..ண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை]



திரு. கதிரைவேற்பிள்ளை மேலைப் புலோலியில் வறிய தொரு குடும்பத்திற் பிறந்தவர். ..கூரிய ..வேகம் அவதான ..த்தி சுறுசுறுப்பு ..வைகள் அவர்பால் ..யல்பாகவே அமைந் ..ருந்தன. ஆனல் அவை பயன் செய் ..யாத வகையில் இளமையில் வறுமை அவரை வருத்தியது. கடன் தொல்லை கலக்கியது. ஒருநாள் புலோலி எங்கும் அவரைத் தேடினர்கள், ..பாருங் கண்டிலர். பிள்ளை ..ந்தர்த்தானம் ஆயினர். மூன்று வருடகாலம் அவரைப்பற்றிய பேச்சு இல்லை அவ்வளவு காலமும் அவருடைய அஞ்ஞாத வாச காலம்.

மூன்று வருடத்தின்பின் கதிரைவேற்பிள்ளை இயற்றிய நாலுரைகள் வடக்கேயிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரத் தொடங்கின. வேதாகம உணர்ச்சியும் தமிழ்ப் பாண்டித்தியமும் அவர் நூல்களிலும் உரைகளிலும் பொங்கித் ததும் ..ின. யாவரும் ஆச்சரிய முற்றுர்கள். ஆறுமுகநாவலரின் மாணக்கரின் மாணக்கர் நா. கதிரைவேற்பிள்ளை என்று அவர் வெளியிட்ட புத்தக முகப்புக்கள் தோறும் ஆக்கியோன் பெயர் குறிப்பிட்டிருந்தது. ஈன்ற பொழுதிற் பெரிது உவந்..து யாழ்ப்பாணம். அம் ..டேயோ! புதிய புதிய ..விற் பிள்ளையின் கீர்த்தி ..நக்கெடுத்து வந்தது. ..பபிரசங்க சிங்கமாய்த் ..ந்நாடெங்கும திக்கு ..யம் செய்து கதிரை ..ற்பிள்ளை செய்த பிர ..ங்க சண்டமாருத முழக ..ம யாழ்ப்பாணத்துக்குங் கேட்டது.

..கான்ம வாதம் என் ..ம் மாயாவாத ஊழல்க ..ும் வஞ்சனைகளையும் ..த்துக்காட்டுவதற்கே ..ந்தவர் காசிவாசி செந்தி ..தயர். அவர் நாவல ..மாணவர். உபநிடதங் ..ும் பிரமசூத்திரத்தை ..ழுத்தெண்ணிப் படித்தவர் ஐயர். சுவாமி வேதாசலத்தின் குரு சோமசுந்தர நாயகர். அவர் மாயாவாத கண்டன சண்டமாருதம் கதிரைவேற்பிள்ளை ஐயர் அவர்களுக்கு வலக்கரமாயும், சோமசுந்தர நாயகருக்கு ஒரு புயமாயும் இடி முழக்கம செய்தார். சைவ சித்தாந்த உலகு அவருக்கு 'மாயாவாத தும்சகோளரி' என்ற பட்டம் வழங்கியது. துவம் சம் தும்சம் என்ருயிற்று. அழிவு என்பது பொருள். மாயாவாதமாகிய மத்த யானையை அழித்தொழிக்கும் சிங்கேறு என்று அந்தப் பட்டத்துக்குப் பொருள் செய்யலாம்.

மாயாவாத தும்ச கோளரியாகிய பிள்ளையைக் கண்டாலோ, பிள்ளையின் இடி முழக்கத்தைக்கேட்டாலோ என்ற ஆசை யாழ்ப்பாணத்திற் பெருகியது. அப்படியானதொரு சமயத்தில் காத்திராப் பிரகாரம் கதிரைவேற்பிள்ளை யாழ்ப்பாணத்துக்கு வந்த, நல்லூரிலே, கந்தசுவாமி கோயிலுக்கு அண்மையில் கனகசபாபதி ஐயர் என்பவரின் வீட்டிலிருந்தார். ஐயர் வெகு விநோதக்காரர். பிள்ளையைப்பற்றி அறிந்திருக்கவேண்டியது போல அத்தியாவசியம் ஐயரைப் பற்றியும் அறிந்திருக்க வேண்டும்.

ஐயர் வித்துவசிரோமணி பொன்னம்பல பிள்ளையின் மாணவர். ஹாஸ்யப் பிரசங்கம் செய்வதில் மிக்க ஆற்றல் படைத்தவர். அவருடைய பிரசங்கத்தைக் கேட்பவர்கள் வயிற்று நோவோடுதான் திரும்ப நேரிடு.. சிரித்துச் சிரித்து வயிறு குலுங்கும்படி பிரசங்கம் செய்பவர் ஐயர் அவருடைய பிரசங்கத்தை நான் கேட்டிருக்கிறேன். அதனை இப்பொழுது நினைத்தாலும் சிரிப்புவரும் ஹாஸ்யக் கதைகளின் சமுத்திரமாயிருந்தார் ஐயர். சுன்னுகம் அ. குமாரசுவாமிப்புலவர் அவர்களையும், நாவலரின் தமையனர் புத்திரர் மானேஜர் த. கைலாசபிள்ளை அவர்களையுங் காணுவதற்கு அடிக்கடி நாவலர் வித்தியாசாலைக்கு வருகிற யர் ஐயர். அவரை நான் பலமுறை கண்டிருக்கிறேன். ஐயரின் கேள்விப்படி அவருக்கு ஒரு சரித்திரம் த. கை அவர்கள் எழுதியிருக்கிருர்கள். பல வகை வண்ணப் பாராவாரம் சமய வேதாகமப் பிரசாரகர் என்றெல்லாம் அவருக்கு அநேக பட்டங்கள் உண்டு. அவர் பிரசங்கஞ் செய்யும்போது புறங்கால் வரை தாழ்ந்த நீண்ட அங்கி தரித்திருப்பார். அங்கியின இருமருங்கும் தங்கப் பதக்கங்கள் தொங்கும். இரவில் விளக்கு வெளிச்சத்தில் பதக்கங்கள் ஒளி காலும்படி ஐயர் இடையிடையே தேகத்தை அசைப்பார். வெகு வேடிக்கைக்காரர் அவர் பதக்கம்பற்றி விசாரித்தால், இராமநாதபுரத்தார் தந்தது இது செட்டிநாட்டார் அளித்தது இது சிங்கப்பூர் வழங்கியது மற்றது என்று வாயூற வருணிப்பர்.

ஒருமுறை சிங்கப்பூரிலிருந்து கொழும்புக்கு வந்தார் ஐயர், அங்கேயிருந்து வீட்டுக்குத் தந்திமூலம் தன் வரவைத் தெரிவிக்கக் கந்தோருக்குச் சென்றவர், 'தான் இறந்துபோனர்' என்று தந்தி கொடுத்தார்.

தொடர்ச்சி 2ம் பக்கம்

## நற் சிந்தனை

—:—

இறப்பும் பிறப்பு
மெமக்கில்லை யென்றவன்
அறமார் நல்லூ ராசானுமே.

### நல்லூரில் சமயப்பிரசாரம்

—0—

நல்லூர் தேவஸ்தான சண்முகதீர்த்த மண்டபத்தில் அ. இ. பொ. ..ச. சங்க ஆதரவில் இன்று நிகழும் சமயப்பிரசார வைபவத்தில் யாழ் சைவபரிபாலனசபை சமயப்பிரசார அமைச்சர் திரு மு மயில்வாகனம் அவர்கள் "ஆண்டானும் அடிமையும்" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழி வாற்றுவார்கள்

---

உ

நன்றுடையானைத் தீயதில்லானை நரைவெள்ளே
றென்றுடையானை உமையோருபாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளம் குளிருமே.

x x x

நன்மைபெருகு அருள்நெறியே வந்தணைந்து நல்லூரில்
மன்னுதிருத தொண்டனர் வணங்கி மகிழ்ந்தெழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றேம் என்றவர்தஞ்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினன் சிவபெருமான்.

## கவலை நீக்க வழி!

இக் கலியுகத்தில் உலகம் படும்பாடு யாவரும் அறிவார்கள் புண்ணியம் குறைந்து பாவம் அதிகரிக்கிறது. ஸ்ரீமத் நாராயணன் தாமே அவதாரங்கள் எடுத்துத் தருமத்தை நிலைநாட்டி துட்டநிக்கிரகம் செய்து சிட்ட பரிபாலனம் செய்தார். செய்வார் என்பது இந்திய ஐதிகம்.

முன்னொருகாலம் தேவுக்கள் அசுரருக்கு அடிமையாகிப் படாதுபட்டபோது தேவுக்களின் வேண்டுதலுக்கிரங்கி மகாதேவராகிய சிவபெருமான் உலகம் உய்வதற்காக, திருமுருகனைத் தந்தார். முருகன் அசுரரை வென்று தேவர்களைச் சிறைமீட்டார். அவரே இக்கலியுகத்திற்கு வரதன். தமிழ்மக்களுக்கும் மொழிக்கும் அவரே குரு அகத்தியருக்குத் தமிழ் உபதேசம் செய்தவர் அவரே. பெருமக்கள் உலகில் நல்ல நிலையில் இருக்கவேண்டுமானல் முருகனையே வேண்டி அவரின் திருவரத்தைப் பெற்ருல் தப்புவார்கள்; அல்லாவிட்டால் அழிந்துபோவது திண்ணம் உலகத்தில் சமாதானம் ஏற்படவும் குறைவிலாது உயிர்கள் வாழவும் வேண்டுமானல் மக்கள் தப வாழ்வை மேற்கொள்ள வேண்டும். முருகனுக்குச் சிறந்த யாகம் செய்ய வேண்டும். இது பகவத் கீதையில் கூறிய ஜெபயக்ஞந்தான். இதற்குத் திரிகரண சுத்தியுடன் தூய உள்ளத்துடன் முருகவழிபாடு செய்ய 1008 பக்தர்கள் கூடி — கந்தசட்டி கவசம் திருமுருகாற்றுப்படை கந்தர் கலிவெண்பா, திருச்செந்தூரகவல், கந்தப்புராணம், கந்தரலங்காரம், கந்தரனுபூதி முதலிய நூல்களைப் பாராயணம் செய்து ஓமம் ஜெபம் முதலியவை செய்ய முன வரவேண்டும். செவ்வாய், வெள்ளிக்கிழமைகளிலும் சட்டிதிதியிலும் கார்த்திகை நட்சத்திரத்திலும் விடாது செய்வதுடன் கந்த விரதங்களும் கந்தசஷ்டி விரதமும் முறைப்படி நோன்பிருந்து அனுஷ்டித்தால் சர்வபலனும் கிடைப்பதுடன் கவலை தொல்லை நோய் பீடை எல்லாம் விலகும் என்பது திண்ணம். இதைச் சைவ நன்மக்கள் கவனிப்பார்களாக.

— சௌரிராயன் —

## குரைகடல் சூழும் கோணேஸ்வரன்

[ கட்டுவனூர் திரு. த. வி. சுப்பிரமணியம் ]

இராகம் : மால்கோஷ் :: தாளம் : ரூபகம்

பல்லவி

உள்ளங் கோள்ளை கோண்ட கோணேஸ்வர நாதா
உனது மகிமை உரைக்குந் தரமா (உள்ளம்)

அனுபல்லவி

தெள்ளத் தெளிந்த நல் வெள்ளிப் பாப நாசம்
வள்ளல்தரு தீர்த்தம் உள்ளத்தில் ஊறிடும் (உள்ளம்)

சரணங்கள்

துள்ளிக் குதித்தாடும் உள்ளத்தருள் மோக(ம்)
வெள்ளத் திலாடிடும் அண்ணல் கோணைநாதா!
வெள்ளியங் கிரியோ விள்ளும் போன்னம்பலமோ
எள்ளுந்தரமா நின்எழில் தக்ஷிண கைலாசம் (உள்ளம்)

அள்ளி அன்பு வீசும் அருட் தேன்றல் நாதம்
உள்ளுந்தோறு முண்மை உரைத்திடும் வேதம்
தெள்ளு மோசைக் கடல் திருக்கோணேஸ்வரம்
தெள்ளமுதே தரும் தேன் கைலாசமே. (உள்ளம்)

## எங்கள் அறிவித்தல்

பங்குனி உத்திரத்தில்வரும் வண்ணைச் சிவன் கோவில் தேர்த்திருவிழாவைமுன்னிட்டு பங்குனிமீ உசஉ (6 4-63) சனிக்கிழமை இந்துசாதன அலுவலகத்திலும். சைவப் பிரகாச அச்சசத்திலும் வேலை நடைபெருது. —அதிபர்.

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

சுபகிருது ஞூ பங்குனி மீ உங உ வெள்ளிக்கிழமை

## கலந்து பேசிக் காரியம் பார்த்தல்!

சித்திரைத்திட்டம் என்ன? செயலாற்றப்படுமா? சிந்தனையிலேயே இருக்குமா? என்றெல்லாம் தலைவர் திரு. செல்வநாயகத்தையும் அவர் கட்சியினரையும் பொது மக்கள் நோக்கிக் கேட்கின்றனர், அவ்விதமாகவே தலைவர் திரு பொன்னம்பலத்தையும் அவர் கட்சியினரையும் 'வேறு வழியை விளக்கமாகக் கூறுங்கள்' என்று பொதுமக்கள் கேட்கின்றனர். கருத்து ஒன்று, கருமம் கைகூட எடுக்கும் வழிகள் வேறு, என்ற நெருக்கடியில் மக்கள் இருப்பது தமிழ் இனத்தின் உரிமை இயக்கத்துக்குப் பங்கம் விளைவிக்கும் என்பதையும் மக்கள் உணருகின்றார்கள்.

ஒத்துழையாமை இயக்கம் அவ்வியக்கத்தில் ஈடுபடுகின்றவர்கள் நூற்றுக்கு நூறு ஒற்றுமைப்படவேண்டிய அவசியத்தை அடிப்படையிற் கொண்டிருக்கின்றது. எனவே தமிழ்பேசும் மக்களின் எதிர்ப்பு ஒருமுகப் பட்டதாயிருத்தல் வேண்டும் என்பது பெறப்படுகின்றது.

தமிழ்மொழி உரிமையைப்பற்றி இலங்கை அரசியற் கட்சிகள் யாவும் ஒரு மாநாடு கூடி ஆலோசித்து ஒற்றுமையான முடிபுக்கு வரவேண்டுமென்பது பலரின் கருத்து. அது உகந்த வழி என்பது உண்மையே ஆனல் அதற்குமுன் தமிழ் பேசும் இனத்தின் சார்பாகவுள்ள தலைவர்கள் குறிப்பாகத் திரு பொன்னம்பலமும், திரு. செல்வநாயகமும், கலந்துரையாடி கருத்து வேற்றுமையற்ற பொருத்தமான ஒரு முடிவுக்கு வருதல் இன்றியமையாத தேவையாகும்.

இதற்கிடையில் அரசியல் நிலைமையை அந்தகாரத்தில் அமிழ்த்திவிடும் நோக்கமாகச் செய்திகளும் வதந்திகளும் கற்பனையாக எழுகின்றன. பிரிவு மனப்பான்மையைப் பெருக்கச் செய்யும் நோக்கமுடைய நயவஞ்சகர்களின் சூழ்ச்சிகள் பேரிடர் விளைக்கும் மிகவும் நெருக்கடியான இந்த வேளையிலே, சிங்கள மொழி தனி அரசவரிசைத் தன்மையுடன் தமிழ்பேசும் மக்கள்மீது திணிககபபடும் ஆபத்திலே, மக்கள் தமிழ் மொழி மானத்தையும் உரிமையையும்மட்டும் நினைத்து ஒன்றுகூடி ஒருவழிப்படுவதற்கு உரியனவற்றை உற்றுயோசித்தலே உகந்த நெறியாகும். ஆகவே தமிழ பேசும் மக்களின் கட்சிகள் ஒரு கூட்டுமுன்னணியாகக் கூடுதல் நன்று. 'இடது' கட்சிகள் மூன்று தனித் தனி இயங்கினல் ஒருவித நன்மையும் அடைய முடியாதென்றறிந்து ஒருங்கு கூடித் தனி இயக்கமாகச் செயலாற்றத் தீவிரமாக உழைக்கின்ற முறையை உதாரணமாகத் தமிழ் பேசும் இனத்தின் தலைவர்கள் கூர்ந்து கவனிப்பார்களாக.

—

## மாயாவாத துர்ச்சகோளரி

1-ம் பககத் தொடர்ச்சி

அடுத்த நாள் வீட்டில் கொண்டாட்டம் நடக்கின்றது. ஐயரோடு தொடர்பு பட்டவர்கள் உறவினர்கள் துக்கங்கொண்டாடுகின்றார்கள். ஆச்சரிய மனிதரான ஐயர் அதேசமயம் வீட்டுக்குள் வந்து நுழைந்தார். ஐயர் ஹாஸ்யத்தால் இயமனையே ஏமாற்றிவிட்டார் என்று ஐயரை அறிந்தவர்கள் சொன்னார்கள். சில நாட்களின் பின் நண்பராயுள்ளவர்கள் சிலர் ஏன் அப்படித் தங்கியடித்தீர்கள் என்று கேட்டபோது, வீட்டிலுள்ளவர்களுக்குத் தன்னிடத்திலும் பற்றுண்டோ என்பதைப் பரீட்சிக்கச் செய்தேன் என்றாராம் இவ்வாறு ஐயர் செய்த வேடிக்கைகள் நூற்றுக் கணக்கில் உண்டு. இப்படிப் பட்ட ஐயர் வீட்டில் கதிரைவேற்பிள்ளை தங்கினர்.

ஒருதினம் கதிரைவேற்பிள்ளை உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை எண்ணெய் தேய்ப்பித்து அப்பியங்கஸ்நானம் செய்வித்தார் ஐயர். அதன் பின் வடை பாயசத்துடன் மந்தம் வருவிக்கும் உணவுகள் வழங்கப்பட்டன. பிள்ளை வயிறுபுடைக்க அவைகளை உண்டு பின் உறங்கினர் உறங்கி எழுந்த பிறகு மோதகம் முதலிய மந்த உணவுகள் மேலும் கொடுககப்பட்டன பிளளை வயிறு பூரிக்க உண்டார். அதன் மேல் வண்ணை வைத்தீசுர வித்தியாலயத்தில் பிரசங்கம் செய்வதற்கு ஒழுங்கு செய்யப் பட்டிருககிறது. அங்கே போவோம். என்று கூறி ஐயர் அழைத்துச் சென்ருர். பெரியதொரு கூட்டம். கற்ருேரும் மற்ருேருங் கூடியிருந்தார்கள். பிள்ளையும் ஐயரும் மேடையில் வீற்றிருந்தார்கள். ஐயர் அக்கிராசனர். சபை பிள்ளையை நோக்கியபடியிருந்தது. ஐயர் எழுந்தார், பிள்ளையின் ஆற்றலைப் புகழ்ந்தகூறி, "அவர் இப்பொழுது ஆறு மணித்தியால நேரம் பேசுவர், அவருக்கு ஆயத்தம் வேண்டுவதில்லை, எந்த விஷயத்தையும் அவருக்குக் கொடுக்கலாம். இப்பொழுது கொடுக்கும் விஷயம் "எறும்பு" என்ருர் ஐயர்; அமர்ந்துவிட்டார். காளமேகம் எழுந்தது.

எறும்பினிடம் மனிதர்கள் படிக்க வேண்டிய பாடங்கள் ஏழு. அவை இவை அவற்றுள் முதல் ஆறு பாடங்களையும் கொடுககப்பட்ட ஆறுமணி நேரத்தில் பேசி முடிப்பேன் என்று தொடங்கியது காளமேகம். உபநிடதங்கள் பிரமசூத்திரம் பதினன்கு சாத்திரம் பன்னிரு திருமுறை பதினெண் புராணம், பாரத ராமாயணம், சங்கத்தமிழ், ஔவையார், திருவள்ளுவர் எல்லாம் பிரமாணமாய் எழுந்து உதிர்கொள்ள ஒவ்வொரு அமசத்துக்கும் ஒவ்வொரு மணி நேரமாக ஆறு மணி நேரத்திலும் ஆறு அம்சங்களைப்பற்றியும் பெருமழை பொழிந்து அமர்ந்தது காளமேகம். பிள்ளை பொழிந்த பெருவெள்ளம் சபையோர் பொழிந்த ஆனந்த வெள்ளத்துடன் சேர்ந்து வைத்தீசுவர வித்தியாலயத்தை ஆழ நீளங் காணமுடியாத ஒரு பெருஞ் சமுத்திரமாக்கியது. அக்கிராசனர் எழுந்தார். ஐயருடன் பிறந்து வளர்ந்த ஹாஸ்யம் அந்தச் சந்தர்ப்பத்தில் கைகொடாமல எங்கேயோ போய் ஒளித்துவிட்டது. எண்ணி வந்தது ஒன்று, முடிந்தது மற்ருென்று. கண்ணீரை அறியாத ஐயரின் கணகளிலும் அன்று கண்ணீர் துளித்திருக்கலாம்போலும்! எத்தனையோ வரிகளில் எழுதககூடியதொரு நீண்ட பட்டத்தைப் பிளளைக்குச் சூட்டி மகிழ்ந்தார் ஐயர் அந்தப் பட்டத்தைப் பாடமாக்கி வைத்திருக்கிறசிலரை நான் அறிவேன், எனக்குப் பாடமில்லை. அது சண்டமாருதம் என்று முடிவதென்ற நினைவுமாத்திரம் இருக்கிறது. கதிரைவேற்பிள்ளையைப்பற்றி நம் பாமலிருந்து பின் நம்பிய கதை இது. —தொடரும்.

## அத்தியடி சிதம்பர நடராச வீரகத்தி விநாயகர் ஆலய மகோற்சவம்

= O =

அத்தியடி சிதம்பர நடராச வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் பங்குனி மீ 24-ந் உ (6-4-63) சனிக்கிழமை கொடியேற்றமும், சித்திரை மீ 1-ந்உ (14-4-63) ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் நடைபெறத் திருவருள் கைகூடுகின்றது. திருவிழாக் காலங்களில், கொடியேற்றம், தேர் தவிர்ந்த ஏழு 7) நாட்களிலும் தொடர்ந்து பிற்பகல் 6 மணி தொடக்கம் 8 மணி வரை வண்ணை ஸ்ரீ. வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான வித்துவான், ஆசிரியர் வி க. ஆறுமுகம் அவர்களால் சங்கீத கதாகாலாட்சேபம் நடைபெறும். இத்துடன் வேறு பல நிகழ்ச்சிகளும் இடம் பெறும். ——

## நன்மை நாடிப் புரிந்த தவறு

"சத்தியம், ஒழுக்கம் ஆகியவற்றில் தவருத நளமகாராசன் கடமையிற் சிறிது தவறியதால் கலி அவனைப் பற்றிக்கொள்ள பல ஆண்டுகள் துன்பம் அனுபவித்தான். அதேபோல், வளர்மதிபோல் பலரும் போற்ற வளர்ந்து வந்த நம் சபை நன்னேக்குடன் செய்த தவறு சூதாட்டமாக முடிந்தது. பள்ளிக்கூடம் நடத்துவதற்கென வாடகைக்குக் கொடுக்கப் பட்ட எம சபைக் கட்டிடத்தை அரசாங்கம் தனதுடைமையாக்க முனைகிறது." இவ்வாறு மத்தியமாகாணை சைவமகா சபையின் 37-ம் ஆண்டு நிறைவு விழா 23-3-63 சனிக்கிழமை மாலை சபை மண்டபததில் தி ந. ம. ஆனந்தர் அவர்கள் தலைமையில் நடைபெற்றபொழுது காரியதரிசி தனது அறிக்கையில் குறிப்பிட்டார்,

சுவாமி சச்சிதானந்தா அவர்கள் மக்கள் சமய வளர்ச்சிக்கு ஆற்றவேண்டிய கடமைபற்றிச் சொற்பொழிவாற்றினர். சபையின் ஞாயிறு சமயபாட வகுப்பு மாணவ மாணவிகளால் பேச்சுகளும் தேவார இசையும் செல்விகள் காந்தி அண்ணுமலை, சிவாந்தி சிவஞானம் அவர்களின் பரத நாட்டிய நிகழ்ச்சியும் இடம் பெற்றன.

—

## பண்டிதமணியின் நூல் வெளியீட்டு விழா

சைவத்தமிழ்ப் பேரறிஞர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட சமயக்கட்டுரைகள் என்னும் நூலின் வெளியீட்டு விழாவினை வைப்பது சப்பந்தமான ஆலோசனைக்கூட்டம் ஒன்று சென்ற ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் ஆசிரியர் சங்கக் கந்தோர் மண்டபத்தில் நடைபெற்றது.

ஈழநாட்டில் இப்பொழுது இலக்கிய நூல்கள் வெளிவந்த வண்ணமிருக்கின்றன. சமய சப்பந்தமான நூல்கள் வெளிவருவது அரிதாக இருக்கின்றது. பண்டிதமணி அவர்களால் எழுதப்பட்ட "சமயக் கட்டுரைகள்" என்னும் நூல் தமிழ் மக்களுக்கு — சைவமக்களுக்கு ஓர் அரிய வரப்பிரசாதமாய் அமையுமென்று விழாக்காரியதரிசி அ பஞ்சாட்சரம் அவர்கள் கூறினர்கள். வெளியீட்டு விழாவை சித்திரை பிற்பகுதியில் யாழ் நகரில் வைப்பதெனவும் மிகவும் விமரிசையான முறையில் நடாத்துவதெனவும் பேரறிஞர்களை விழாவில் முக்கிய பேச்சாளர்களாய் அழைப்பதெனவும் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது. விழாபற்றிய விபரமான முடிவுகள் மிகவும் விரைவில் வெளியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

——

திருவதிகை - மனவாசகங்கடந்தார்

அருளிச் செய்த

## உண்மை விளக்கம்

மூலமும் உரையும்

[சித்தாந்த பண்டிதர், சைவப்புலவர் இ. செல்லத்துரை]

( முற்றொடர் - 12 )

### தத்துவங்களுக்கு வேருய் ஆன்மா உண்டு

ஆறு சுவையு மருந்தி யவைதம்மை
வேருெருவன் கூறியிடும் மேன்மைபோல் — ஆறாறும்
ஒன்ருென்று நாடியுணர்ந் தோதிலதி லுற்றறிவாய்
நின்றபொருள் தானேகாண் நீ. 26.

கொ—கூ: (ஆன்மா எது என்பதை) ஓதில் (ஆறு வகைச் சுவைக்கும்) வேறு (ஆகிய) ஒருவன் ஆறு சுவையும் (ஒன்று ஒன்ருய்) அருந்தி (நாடி உணர்ந்து) அவைவ தம்மைக் கூறியிடும் மேன்மைபோல், ஆறு ஆறும் ஒன்று ஒன்ருய் நாடி உணர்ந்து, அதில் உற்று, அறிவாய் நின்ற பொருள் தானே நீ (என்று) காண்.

ப—ரை: ஓதில் - ஆன்மா எது என்பதை உரைக்குமிடத்து, வேறு ஒருவன் - (ஆறுவகைப்பட்ட சுவைகளுக்கும்) வேறுபட்டு நின்ற ஒருவன், ஆறு சுவையும் அருந்து - (அவ்) ஆறு சுவைகளையும் (ஒன்று ஒன்ருகப்) புசித்து, கூறியிடும் மேன்மைபோல் - (ஆராய்ந்து அறிந்து) இது கைக்கிறது; இது கார்க்கிறது; இது கூர்க்கிறது; இது துவர்க்கிறது; இது புளிக்கிறது; இது இனிக்கிறது என்று சொல்லுந்தன்மை போல, ஆறு ஆறும் - முப்பத்தாறு தத்துவங்களையும் ஒன்று ஒன்ருக நாடி உணர்ந்து - ஒவ்வொன்ருக விசாரித்து அறிந்து, அதில் உற்று - அவ்வனுபவத்தைப் பொருந்தி, அறிவாய் நின்ற பொருள் தானே நீ கா - அறியும் இயல்பினதாய் நின்ற பொருள்தான் நீயெய ஆன்மாவாம்.

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

# உண்மை விளக்கம்

( 2-ம் பக்கத் தொடர்ச்சி )

பொழிப்பு; ஒருவன் ஆறு சுவைகளையும் ஒவ்வொன்ருகப் புசித்து அவற்றின் இயல்புகளைக் கூறுந்தன்மைபோல, முப்பத்தாறு தத்துவங்களையும் விசாரித்தறியும் இயல்பினதாய் நின்ற பொருளே ஆன்மாவாம்.

5. (நீ ஆகிய) பதி:

**அறிவுக்கு அறிவாய் நின்று அறிவிப்பது பதி**

குன்ரு வருளாலே கூறினீ ரென்வடிவு
பொன்ருத நம்முருவம் போதியீர் — நின்றருக்கன்
கண்ணுக்குக் காட்டுமாப் போலே யுனதறிவின்
நண்ணியறி வித்திடுவோம் நாம். 27.

கொ—கூ: "(தேவரீர்) குன்ரு அருளாலே என் வடிவு கூறினீர்; (இனி) பொன்ருத நும் உருவம் போதியீர்'; (என மாணவகன் வினவியதற்கு ஞானசிரியர்:) "அருக்கன் நின்று (பொருள்களைக்) கண்ணுக்குக் காட்டுமா போலே, நாம் உனது அறிவில் நண்ணி அறிவித்திடுவோம்." (என்ருர்)

ப—ரை; குன்ரு அருளாலே என் வடிவு கூறினீர் - தேவரீர் என்றுங் குறைவுபடுதலில்லாத பேரருளினுலே அடியேனுடைய சொரூபத்தை அருளிச் செய்தீர்; பொன்ருத நும் உருவம் போதியீர் - இனி, கெடாத தேவரீருடைய சொரூபம் எப்படிப்பட்டதெனபதை அடியேனுக்கு அருளிச் செய்ய வேண்டும்; (என மாணவகன் வினவினுனுக ஆசிரியர்:) அருக்கன் நின்று கண்ணுக்குக் காட்டுமா போலே - சூரியனது ஒளி நிலைபெற்று நின்று இருளை நீக்கிக் கண்ணொளியையும் பிற பொருள்களையும் துலக்கி அக்கண்ணுக்குச் சூரியனையும் பிற பொருள்களையும் காட்டுவதுபோல, நாம் உனது அறிவில் நண்ணி அறிவித்திடுவோம - நாம் உனது அறிவிலே (அறிவுக்கறிவாய்ப்) பொருந்தி நின்று பாசம் பதி முதலியவற்றின் உண்மை இயல்புகளை அறிவித்து வருவோம்.

சுய ஒளி இருந்தும் தானே காணும் இயல்பற்ற கண்ணுக்குச் சூரியனது பிரகாசம் துணை செய்கின்றது அது உலகப்பொருள்களை விளக்கி இவை இத்தகையவெனவும், பிரகாசமாகிய தன்னை வேறறக் கலந்துள்ள சூரியனை விளக்கி அச்சூரியன் இத்தகையதெனவும் கண்ணுக்குக் காட்டும் அங்ஙனமே இறைவன் தன்னின் வேறற நின்ற திருவருளால், தன்னறிவுகொண்டு தானே எதையும் அறியமாட்டாத ஆன்மாவுக்கு மும்மலவியல்புகளையும் தன்னியல்புகளையும் விளக்கியருளுவனென்க இதனைக் "கண்டொல்லை காணு நெறி கண்ணுயிர் நாப்பணொளி உண்டில்லையல்லதொளி" என்னுந் திருவருட்பயனுலும் உணர்க.

பொழிப்பு: மாணவகன்: "தேவரீர் என் வடிவாகிய ஆன்மவியல்பினை உரைத்தருளினீர்கள்; இனிநுஞ் சொரூபமாகிய பதியியல்பினை அருளிச்செய்வீர்களாக" என்ருனுக, ஞானசாரியர் 'சூரியன் கண்ணுக்கு உதவுமாப்போலப் பதி ஆன்மாவுக்கு அறிவிக்கும் இயல்பினது" என்ருர்.

—தொடரும்.

---

இவ்வாரம் 7-4-63 — 14-4-63

# உங்கள் பலன் ?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

இவ்வாரமும் தொல்லையானது. செலவுகள் பெருகும். எதிர்பாலைச் சேர்ந்த நண்பர் உதவுவர் இறுதிஇருநாட்களையும் எச்சரிக்கையோடு கழிக்குக,

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசிரிடம், 1, 2-ம் பாதம்,

நல்லவாரம். முயற்சிகளில் இலகுவில் வெற்றியும் மேலிடத்தாரின் சலுகைகளும் உண்டாம். அவதூறு பேசுவோர் மூலமான தொல்லைகளுக்கு இடமுண்டு.

**மிதுனராசி** மிருகசிரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 2ம் பாதம்.

தொழிலளவில் நல்ல வாரம். புதுமுயற்சிகளில் வெற்றியும், அதிக வேலையும், மனக்கவலையும், நண்பர்களுடனும் இனத்தவருடனும் சச்சரவும் ஏற்படும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்,

குடும்பப் பிரச்சினை சில தீர்வுறும். ஆனுல் குடும்பத்தில் பெரும் அமைதி ஏற்படாது. பணபளவில் நல்ல வாரம். உடல்நிலை பிரச்சினைக்குரியது,

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

அலுவலகத்தில் சச்சரவும் சுயவீனமும் உண்டாம். செலவுகளைச் சமாளிக்க முடியாது திண்டாடுவீர். கண்நோய்க்கிடமுண்டு. எதிரிகளை வெற்றிகொள்ளலாம்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

பணபளவில் நல்ல வாரம். தொழில் வெற்றியும் உண்டாம். ஆனுல் மனநிம்மதி இருககாது. குடும்பநிலைமை குழம்பலாக இருக்கும்.

**துலாம்,** சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

உமது எண்ணப்படி நடந்துகொள்வது கடினமாயிருக்கும். இரகசிய எதிரிகள் மூலமான தொல்லைகளுக்கு இடமுண்டு. நிலபுலங்களால் இலாபம் நிச்சயம்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

விவசாயவெற்றி நிச்சயம் பண இலாபமும் புது முயற்சிகளில் வெற்றியும் உண்டாம். கல்வி வெற்றியும் நிச்சயம். தந்தைவழி உறவினரின் தொல்லையும் உண்டாகும்,

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

நண்பர்கள் மிக உதவுவர். புது முயற்சிகள் தடங்கலபடும். ஆனுல் வெற்றி பெறும். அலுவலகத்தில் சச்சரவுகிடமுண்டு. சண்டைகளை கட்டிக்கொள்வதில் முந்திநிற்பீர்.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

குடும்ப விவகாரங்கள் குழம்பலாக இருக்கும். நண்பர்களுடன் தவறான விளக்கங்கள் சச்சரவுகளுக்கு இடமுண்டு. செலவுகள் பெருகும், சில கண்டனங்களுககாளாக நேரிடும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

எதிரிகளுககு இன்னல் உண்டாம் நிலபுலங்களால் இலாபம் நிச்சயம், பழைய முதலீடுகள் நல்ல பலனைத் தரும். ஆனுல் ஞாயிறு திங்கள் செவ்வாயை எச்சரிக்கையோடு கழிக்குக.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

கல்வி ஈடுபாடுகளில் வெற்றி நிச்சயம், நண்பர்களும் உறவினரை மிக உதவுவர். ஆனுல் உடல் நிலை ஊறுபடும். செவ்வாய்மாலை புதன் வியாழன் எச்சரிக்கையோடு கழியவேண்டும்.

---

உ
சிவமயம்
காரைக்காலம்மையார்

## குருபூசை

—0—

நாள்: சுபகிருதுஹூ பங்குனிமீ உ௯ உ (10 - 4 - 63)
புதன்கிழமை.

இடம்: சைவ பரிபாலன சபை
நாவலர் ஆச்சிரம மண்டபம்

நிகழ்ச்சிகள்:

இரவு 7 மணி ஆரம்பம்
கடவுளாராதனை
தமிழ்மறையோதல்
ஸ்ரீமத். தி. கலியாணசுந்தரக் குருக்கள்

விரிவுரை;
"காரைக்காலம்மையார்"
திரு. பொ. அப்புக்குட்டி
அவர்கள்

சைவாபிமானிகள் யாவரும்
சமுகமளிப்பார்களாக

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்
சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம் 4-4-63.

---

## சைவ சித்தாந்தக் கருத்துக்கள் நிறைந்த நாடகம்

நேற்று மாலை 5-30 மணியளவில் வண்ணை வைத்திஸ்வர வித்தியாலய திறந்த வெளி அரங்கில் 'தேவன்' அவர்களின் 'தென்னவன் பிரமராயன்' என்னும் நாடக நூல் வெளியீட்டுவிழா நடைபெற்றது. திரு. சிற்பி அவர்கள் (கலைச்செல்வி ஆசிரியர்) வெளியீட்டுரையை வாசித்தார். விழாவில் நூலின் முதற்பிரதியைவாங்கிவிற்பனையைத்தொடக்கி வைத்த கலையரசு சொர்ணலிங்கம் அவர்களும் அடுத்து உரைநிகழ்த்திய திரு A. T. பொன்னுத்துரையும் நாடகம் எழுதுவோர் அவசியம் நடிப்பு அனுபவமும் உணர்சி மாற்றங்களும் தெரிந்தவர்களாக இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்தினர். திருமதி சச்சிதானந்தம் B. A அவர்கள் தென்னவன் பிரமராயன் சைவசித்தாந்தக் கருத்துக்களையும் தத்துவங்களையும் நிறையக்கொண்டுள்ளது என்றும் படிப்பதற்கும் நடிப்பதற்கும் அருமையான நூலென்றும், சைவ சமய தத்துவங்கள் உயர்ந்தவையாயும் அரியவையாயுமிருந்தும் அவற்றை உணராத மக்களுக்கு இப்படி நாடகங்கள்மூலம் புகட்டுவது பயனுள்ள வழி என்றும் குறிப்பிட்டார்.

செல்வி. புஷ்பா செல்வநாயகம் உட்பட பலர் உரையாற்றினர்,

---

# கோயிலுக்குப் போக வேண்டுமா?

—:0:—

[ திரு. பொ. தம்பிப்பிள்ளை அவர்களால் சூராவத்தை அம்பாள் கோயிலில் சிவராத்திரி தினத்தில் எழுதி வாசிக்கப்பெற்றது]

கோயில் என்ற சொல்லுக்கு இறைவன் இருப்பிடம் என்பது பொருள். ஆலயம் என்பதற்கு "கடவுளின் திருவடிகளில் உயிர்கள் பொருந்தியிருப்பதற்கு ஏற்ற இடமென்பது பொருள்" அறிவிற் சிறந்த ஒளவையார் 'ஆலயந் தொழுவது சாலவும் நன்று' என்று அருளிச் செய்திருக்கிருர். அதனைச் சிறிதேனும் அனுசரிக்கவேண்டும்; ஊர்களதோறும் கோயில்கள் அவசியம் வேண்டும். கோயில்கள் இல்லாத ஊரில் குடியிருக்கவேண்டாமென்பது பண்டைப் பழமொழி. எங்கும் நிறைந்து விளங்கும் கடவுளுககுக் கோயில் எதற்கென்று சிலர் கேட்கிறதுமல்லாமல் கோயில் தரிசனத்தை ஆதரிக்கிருர்களில்லை. மின்சாரம் ஆகாயம் முழுவதும் வியாபித்திருந்த போதிலும் அதனை ஒரு மின்சார நிலையத்தின் மூலமாகத்தான் மக்களுக்குப் பயன்படுத்த வேண்டியதாக விருக்கின்றது. பூமிக்குள் அடியில் நீர் எங்கும் வியாபித்திருந்தாலும் கிணறு தோண்டித் தானே நாம் நீரைவெளியே கொண்டுவந்து பயன்படுத்துகிருேம். அதுபோலத்தான் கடவுள் அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாக விருந்த போதிலும் கோயிலிற்ருன் சிறப்பாக நின்று மக்களுக்கு அருள் புரிகின்ருர். நாடுநகரங்களில் சினிமாப்படக்காட்சிகள். வர்த்தகசாலைகள், கோடு கச்சேரிகள் தனித்தனியாக இருக்கின்றன. அந்த அந்த இடங்களுக்குப் போகும்போது எங்கள் மனமும் செயலும் அந்த அந்த வேலைகளில் எவ்வளவு ஊக்கத்துடன் ஈடுபடுகின்றன. கோயில்களிற்தான் உலகப்பற்றினின்றும் கவலையினின்றும் சற்றேனும் விடுபட்டு சிறு நேரமாவது பரமபொருளிடம் மனதைச் செலுத்தித் தெய்வத்தன்மையைப் பெருக்கலாம்; சுவாமி விவேகானந்தர் சொல்லியிருககிருர் (Religion is the supreme duty of a person) ஒருவருககுச் சமயம் முதல் பிரதானமான கடமை என்று.

சைவசமயத்தில் சரியை கிரியை யோகம் ஞானம் என்ற வழிவகைகளில் புத்தயிர் கொடுத்த திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நான்கு மகான்களும் இறைவனைக் கண்ணாரக் கண்டவர்கள். இலைவனது அருளகலந்து திருவடிபெற்றவர்கள், அவர்கள் அருளிய அருள் வாக்குகளே நமக்கு நன்ருகக் காட்டுகின்றன. "இமைப பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான்" என்ருர் மாணிக்கவாசகர். "நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன் நினையாதொரு போதும் இருந்து அறியேன்" என்கிருர் திருநாவுக்கரசர். "எத்தால் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை" என்கிருர் சுந்தரர். "உள்ளங்கவர் கள்வன்" என்கிருர் சம்பந்தர். இவர்கள் தங்கள் மண்ணுலக வாழ்வை எல்லாம் திருத்தலங்களுக்குச் சென்று கோயில்களில் இறைவனை வழிபட்டுப் பாடுவதிலே கழித்தனர். திருக்கூட்டங்களில் சிவனடியார் தமிழ்நாடு முழுவதும் நடந்து சென்று தமிழகத்தைச் சிவலோகமாக்கியமை கோவில் வழிபாட்டின் பெருமையைக் காட்டியிருக்கும்போது நாம் அவர்கள் சென்ற வழியிற் செல்வது நமக்கு நன்மையையும் அறிவுடைமையையும் தெய்வ பக்தியையும் கொடுக்கும். ஆலயவழிபாட்டுக்கு வரும் தூய எண்ணம் அவர்களைத் தூய்மையாக்கும். மணிவாசகர் அடியார் நடுவுள் நானிருக்கும் அருளைப் புரிவாயென இறைவனைவேண்டுகின்ருர். தொண்டரோடு கூட்டு கண்டாரென்று தாயுமானவர் பாடுகின்ருர். சிவஞான சித்தியார் சொல்லுகிருர்:- "ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம் உபசாரம் உறவு சீலம், வழுக்கில்லாத் தவம், தானங்கள், வந்தித்தல் வணங்கல் வாய்மை, அழுக்கிலாத்துறவுஅடக்கம் அறிவொடு அர்ச்சித்தலாதி, இழுக்கிலா அறங்களாலல் இரங்குவான் பணியறங்கள்".

—

---

நேயர்கள் நெஞ்சம்

## சைவ பரிபாலன சபைக்கு ஒரு வேண்டுகோள்

ஜி சீ ஈ வகுப்புக்குச் சைவாசிரியர் சங்கம் வகுத்த 'சைவ சித்தாந்த பாடத் திட்டம்' சைவபரிபாலன சபையாரால் அங்கீகரிக்கப்பட்டு வித்தியா பகுதிக்கு அனுப்பப்பட்டது. அதுபற்றி வித்தியாபகுதி ஆலோசிப்பதானுல், சைவ சித்தாந்தக் கொள்கையுடையாரை அழைத்து ஆலோசிக்க வேண்டும். சைவ சித்தாந்தத்துக்குப் புறம்பான - எதிரான அதனை அழிக்க முயலுகின்ற ஏகான்மவாதக் கொள்கையுடையாரையும் அழைத்துச் சைவசித்தாந்தப் பாடத்திட்டத்தை ஆலோசிப்பது — ஆலோசித்தது பெரிய அநீதி! இதுபற்றிச் சைவபரிபாலன சபையார் சிந்தித்து ஆவன அத்திபாவசியகம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்ருேம்.

இங்ஙனம்,
பொ. கந்தையனுர்
செயலாளர்.
செந்தமிழ்மன்றம்,
சாவகச்சேரி.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

சரவணை 1 கதிரவேலு பாலசிங்கமும் மனைவி
2. மனோன்மணியும்
—வளக்காளிகள்.

எதிராக

வழ. இல. M. B. 4347
ஊர்காவற்துறை நாரந்தனை.
1. சவேரி றப்பியலும் மனைவி
2. ஞானமும்.
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 4347ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1963 ஞு மே (வைகாசி) மீ 11 உ (11-5-63) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 1218-75 சதம். மேலும் 750/- ரூபாவுக்கும் 21-10-61 திகதி தொடக்கம் 10-10-62 வரைக்கும் வருடமொன்றுக்கு 15% வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரைக்கும்வருடமொன்றுக்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 205-35 சதமும்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறை கோவிற்பற்று நாரந்தனை இறை "ஈச்சம்புலம்" நிலப்பரப்பு 7. இதில் தென்-மேற்குப் பக்கமாக நிலப்பரப்பு 6. வீடும் கொட்டில், தென்னை, வேப்ப மரங்களும் இதற்கு எல்லை கிழக்கு சந்தியாகு பிருன்சிஸ் மனைவி ஞானப்பூவினுதனம். வடக்கு போவான் மனைவி மரியாயினதும் றப்பியல் மனைவி மரியாயினதுமாதனம். மேற்கு சவரிமுத்து கைம்பெண் பொன்னுவினுதனம். தெற்கு இராசையா மனைவி பிலோமினம்மாவினுதனமும். ஒழுங்கை முகப்பும். தெற்கில் ஒழுங்கை முகப்பிலிருந்து இந்தக காணியின் கிழக்கெல்லை நெடுக இந்தக் காணியின் மிகுதிக்கு ஒரு அடிப் பாதைப் பாவிப்புப் பிற நீங்கலாகவுள்ளது.

வி. செ. குட்டிப்பிள்ளை,
கொமிஷனர்.
23-3-63.
613 காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம்.
M 2. 5-4-63.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்

சிறும்பியடி, யாழ்ப்பாணம்
இளையதம்பி வைத்திலிங்கம்
—வழக்காளி.

இல. MB/4344.

எதிராக:
கொட்டடி யாழ்ப்பாணம்
சிவகுரு பசுபதிப்பிள்ளை
—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் MB/4344-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணி 1963-ம் ஞு வைகாசிமாசம் (4-ம்) நாலாம் திகதி சனிக்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலததில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல் வட்டி ரூபா 20533/-ம். ரூபா 14000/-க்கு 20-10-61 தொடக்கம் 22-3-62 வரை 10 வீதமான. வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 320/02 சதம். இத்தொகையில் ரூபா 2825/- எதிரியால் தீர்வையின் பின் கொடுபட்டது.

காணி விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கிறை "திருவளர்திடல்" பர, நெ. இல. எட்டு (பர.நெ.இல.8) இது சேவயர் J. மானுவேல் தயாரித்த 346-ம் இலக்க அளவுபடத்தின்படி முதலாம் துண்டாகக் காட்டப்பட்டுள்ளது. இந்தப் பர. நெ. இல. எட்டுக்கும் எல்லை கிழக்கு இளையதம்பி பழனிச்சாமிக்குரியவாதனம். வடக்கும் மேற்கும் ரோட்டு தெற்கு செல்லப்பா பெண் தங்கமுத்துவிற்குரியவாதனமும் வேலன் பெண் பொன்னுவிற்குரியவாதனமும். இதடங்கலும், கல்வீடும், மற்றும் கட்டிடங்களும், கிணறும், பயிர்வகைகளும், மற்றும் அதற்குரியவைகளும்.

காரைநகர்,-
1963-ம்ஞு பங்குனி மீ 2-ம்உ

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்,
M 4. 5-4-63.


யாழ்ப்பாணம்

## —ஐக்கிய இலாபநிதி—

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறுங் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல M B 3894

இப்பொழுது வலிகாமம் கிழக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமென்ற பெயருடனும் விலாசத்துடனும் நடத்தப்படும் ஆவரங்கால் ஐக்கிய விவசாயஉற்பத்தி விற்பனைச் சங்கம்.
- வழக்காளிகள்.

எதிராக

வேலாயுதர் சுப்பிரமணியம்
புத்தூர் தெற்கு — எதிரி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M B 3894 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணி 1963-ம் ஆண்டு வைகாசி மாதம் 18ம் உ சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபா 1577-ம் 13-2-61 தொடக்கம் 20-11-61 வரையிலும் ரூபா 1225-க்கு 4 வீத வட்டியும் அதன் பின் பணம் முற்றாக இறுபடும் வரையிலும் முழுத் தீர்வைத் தொகைக்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 169-02ம்.

காணியின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு புத்தூர் கோயில்பற்று புத்தூர் இறை 'கொற்றுத்தலானை" நில. பரப்பு 10ப், பனைகளும், இதற்கு எல்லை கிழக்கு குணசேகரர் காசிப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கு குணசேகரர் காசிப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு சிற்றம்பலம் நடராசாவின் ஆதனம். தெற்கு கதிரேசு சின்னப்புவிற்கும் ஆவரங்கால் சிவன்கோவிலுக்கும் முடிக்குரிய ஆதனமும். இதடங்கலும்.

க. செல்வத்துரை,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
"முருகன் இல்லம்"
இணுவில், 28-3-63.
M. 294 5-4-63.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்

இல MB. 4280
1. கந்தையா இராசையாவும் பெண்
2. பவளமும், நல்லூர்
—வழககாளி

எதிராக

இளையவி சண்முகம், நல்லூர்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் MB. 4280-ம் இலகக வழக்கில் எனககுக்கிடைதத கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுககாணியை, 1963-ம் ஞு சித்திரைமீ 27-ம்உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடககம் அந்தககாணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல் வட்டி ரூபாய் 1831/25-ம். 25-9-61 தொடககம் 20-2-62 வரைக்கும் ரூபாய் 1000/-க்கு 9 வீத வட்டியும் அதன்பின் முழுததொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 163/34-ம். (செலவு செய்த தொகை ரூபா 110/32; வெலியாதச் செலவு 30/07; ஏற்படககூடிய செலவு ரூபா 22/95)

ஆதன விபரம்:

வடயாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் கோவிற்பற்று திருநெல்வேலி இறை 'குளத்தக்குக கிழக்கு" என்னும் காணி நி.பர. 3 குளி 6, 234/1170 இதில் கிந்தமாக நி.பர. 2 குளி 6, 234/1170-ம் கிணற்றுப்பங்கும் யாழ்ப்பாண பருத்தித்துறை வீதிககுப் போககுவரவுசெய்யும் கிழக்கொழுங்கைககுப் போகும் வடக்குக கையொழுங்கைப் பாவிப்புரித்தும் எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு கந்தையா இராசையா பெண் பவளத்தினுதனம், மேற்கு இளையவன் மயிலுவினுதனம், தெற்கு பொன்னுத்துரை பெண் பூரணத்தினுதனம்.

அ வெற்றிவேலு
கொமிஷனர்.
19, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம், 9-3-63.
M, 295, 5-4-63.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. யூலியஸ்ராஜநாயகம் குணரட்ணமும்
2. பெண் தேவநேசம் குணரட்ணமும், இருவரும் மானிப்பாய் —வழககாளி.

இல. M B. 2928

எதிராக

1. லிகோரி ஆசீர்வாதமும்
2. பெண் திரேசம்மா
3. பேதுருப்பிள்ளை ஞானப்பிரகாசர் அனைவரும் செனபற்றிஸியா ரோட் யாழ்ப்பாணம்
4. றபிகாசதியாப்பிள்ளை கைம்பெண் றிவிகா செனபற்றிஸியா ரோட் யாழ்ப்பாணம்
5. சுவாக்கின் மோசெஸ் கைம்பெண் மாரிப்பிள்ளை
6. சுவாக்கிம அல்பிறிட் பெண் மாகிறற்
7. சுவாககின் அல்பிரட் அனைவரும் 136 வான் சொலிவீதி யாழ்ப்பாணம்.
8. எஸ். எம். முகமெத் லெபே பெண் உம்மாசல்மா
9. நயினு மொகமெற் லெபே இருவரும் சோனகதெரு யாழ்ப்பாணம்.
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B 2928-ம் இலகக வழககில் எனக்குக்கிடைத்த கோட்டுக கட்டளைப்படி பின்னால் விபரிககப்படும் ஒருதுண்டுக் காணி 1963 ஞு வைகாசி மீ 4 உ (4-5-63) சனிககிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

மேற்காட்டிய இரண்டாம் வழககாளிககு முதலாம் இரண்டாம் எதிரிகள் செலுத்த வேண்டிய தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 9630-ம். இதற்கு 6000-கக (16-6-60) தீர்வைத் திகதி தொடககம் 20-3-61 வரை 100-க்கு 12 வீத வட்டியும் பின் முழுததொகையும் இறுபடும் வரைக்கும் 5 வித வட்டியும் கோட்டுச் செலவு 470-55,

காணி விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குழி கோவிற்பற்று கரையூர் "அவுடயன்காடு" பரப்பு நிலமாச்சம் (1-ம்) ஒன்றும் குழி 14 7/8. இதில் கிழக்குப் பககமாக குழி (14-ம்) பதினொலும். கடையும் பயிர்களும் மற்றும் அதைச் சேர்ந்தவைகளும் இதற்கு எல்லை கிழக்கு செனபற்றிஸியா ரோட்டு. வடக்கு ஒழுங்கை. மேற்கு லோகஸ் சேவியருக்கும் பெண் அருளம்மாவுக்கும் உரிய ஆதனம். தெற்கு A. M, யோசெப்புக்கும் A. M. யேக்கப்புக்கும் உரிய ஆதனம், இந்தப்பகுதி நிலம் D 208/77 லொற் 2 A ஆக பிளான் நம்பர் 607 A ல் 9-4-52 ல் உத்தரவுபெற்ற உலாந்தா ஜே மனிவேல் ஆல் தயாரிக்கபபட்டு D 236/107-ம் இலக்கத்தில் பதியப்பட்டது.

சி. செ. மாரிமுத்து,
கொம்மிசனரும்,
விலைமதிப்பாளரும்.
விதானை வளவு
சித்தன்கேணி
1-4-63.
M 1 5-4-63.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—:—

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்
கோட்டில்

M. B. 3232
யாழ்ப்பாணம், பண்ணை
(1) K. G. கனகநாதனும் மனைவி
(2) பாறுவதியும்
வழக்காளிகள்

எதிராக

யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் ரோட்டு நீககிலாஸ் ஒழுங்கை
(1) சின்னககுட்டி என்கிற சின்னத்தம்பி சுப்பிரமணியமும் மனைவி
(2) வள்ளியம்மையும்
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டின் M B 3232 ம் இலகக வழககில் எனக்குக் கிடைதத கோட்டுக் கட்டளைப்படி இதன் கீழ் விபரிககப்படும் காணியை 1963-ம் ஆ வைகாசி மீ 14உ செவ்வாய்கிழமை (14-5-1963) முற்பகல் 10மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 4540. மேலும் ரூபா 4000 ககு 25-1-1960 தொடக்கம் 24-6-1960வரை 12வீத வட்டியும் கூட்டிய தொகைககு 24-6-1960 தொடககம் இறுபடும்வரை 5வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 248 சதம் 85. வட்டியால் கொடுபட்டது ரூபா 149 சதம் 66,

காணி விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக்கோவிற்பற்று சிவியாதெரு இறை சுப்பையன் வளவு நி பர. 4 நாலும் வீடும் கிணியும் பனைகள் தென்னைகள் மற்றும் செய்பயிர் வான்பயிர்களும். எல்லை கிழக்கு சுப்பையா பெண் விசாலாட்சியின் ஆதனம். வடக்கு சுப்பிரமணியம் இராசையாவினுதனம். மேற்கு ஜெ எஸ். நீககிலாகவினுதனம். தெற்கு ஒழுங்கை இதடங்கலும்.

செ. இரத்தினசபாபதி
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
இல:45, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம், 28-3-63.
M 6 5-4-63,

## மாணவர் இலக்கிய மன்ற ஆண்டு விழா

சிதம்பரம், பங்குனி 17.

சிதம்பரத்திலுள்ள தவத்திரு. ஆறுமுகநாவலர் உயர்நிலைப்பள்ளி மாணவர் இலக்கியமன்ற ஆண்டுவிழா பங்குனி 16-ந் தேதி அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவர் ஸ்ரீ ஜி. சுப்பிரமணியபிள்ளை எம். ஏ, பி. எல் தலைமையில் நடைபெற்றது,

தலைமை ஆசிரியர் ஸ்ரீ. சுவாமிநாதன் எல்லோரையும் வரவேற்றார். மாணவர் மாணவிகள் கலாநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

தவத்திரு ஆறுமுகநாவலர் அறநிலைய நற்பொறுப்பாளர் ஸ்ரீ. சி. க. இராசேசுவரன் போட்டிகளில் வெற்றிபெற்றுள்ள மாணவ, மாணவிகளுக்குப் பல பரிசுகள் வழங்கினார்.

திரு. மா, பா, "தினமணி" நிருபர்.

## கட்டளை விளம்பரம்

M/2389

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டில M/2389-ம் இலக்கத்தில் 16/2 கச்சேரி, நல்லூர் ரோட்டு, யாழ்ப்பாணம் எஸ். சந்திரசேகரமும் பெண் வரதலட்சுமியும் வழக்காளிகளாக மூளாய் தொல்புரம் ஐக்கிய பரஸ்பரசகாய சங்கத்தின் தலைவர் ஏ. கே. நவரத்தினம் முதலாம் எதிரியாகவும், தனாதிகாரி பி. ஆறுமுகம் இரண்டாம் எதிரியாகவும், காரியதரிசி M, நமசிவாயம் மூன்றும் எதிரியாகவும், இரண்டாம் வழக்காளியின் காலஞ்சென்ற K, வேலாயுதர் ஓர் அங்கத்தவராகவிருந்தபடியால அவருககுச் சேரவேண்டிய உதவிப் பணம் ரூபா 2000/- ஷெ சங்கத்திலிருந்து அறவிட்டுக் கொள்ளும்படி வழக்குத தொடரப்பட்டிருக்கிறது.

ஆகையால் ஷெ சங்கத்தின் அங்கததவர்களும் இன்னும் மேற்படி சங்கத்தின் தொடர்பு உடையோர் எவராவதும் 8-4-63 காலை 10 மணிக்குக் கோட்டில் வெளிப்பட்டு தங்களுக்கு ஏதாவது பிசகு தடையிருப்பின் வெளிப்படுததும் படி இத்தால் கட்டளையிடப்படுகிறது.

1963-ம் ஞு மாசி மீ 8-ம்உ.
கோட்டுக்கட்டளைப்படி,
Sgd. G. A. V. Pillainayagam
சக்கிடுத்தார்.
M. 200 29, 5-4-63.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாசயந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 5 4-1963 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர், நம. சிவப்பிரகாசம்.